# கொக்குவில் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கம் - கனடா
## இளையோருக்கான கல்விசார் போட்டிகள்

## தமிழியல் அறிவுப்போட்டி - 2020
***9 வயதுக்கு உட்பட்டோருக்கான வினாக்கொத்து - விடைகள்***

1. ஒரு செயலைச்செய்யும் பொழுது முதலில் வணங்க வேண்டிய கடவுள் யார்?
   பிள்ளையார்

2. யாதும் ஊரே யாவரும் கேளீர் என பாடியவர் யார்?
   கணியன் பூங்குன்றனார்

3. ஈழத்தின் எந்த நகரத்தை ”மீன்பாடும் தேனாடு” என அழைப்பர்?
   மட்டக்களப்பு

4. கடலில் மூழ்கியதாக கூறப்படும் தமிழர் வாழ்விடம் யாது?
   குமரிக்கண்டம்

5. இரட்டைக் காப்பியங்கள் எவை?
   சிலப்பதிகாரம், மணிமேகலை

6. ஐவகை நிலங்களும் எவை?
   குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.

7. கனடாவின் தேசியகீதத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?
   கவிஞர் கந்தவனம்.

8. சைவத் திருமுறைகளைத் தொகுத்தவர் யார்?
   நம்பியாண்டார்நம்பி.

9. தமிழுக்கு மட்டுமே உரிய சிறப்பு எழுத்து எது?
   “ழ“ –ழகரம்

10. நல்வழி எனும் நூலை எழுதியவர்?
    ஔவையார்

11. இலங்கையை ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் வன்னியை ஆண்ட மன்னன் யார்?
பண்டாரவன்னியன்.

12. தமிழ்மொழியில் எத்தனை உயிர்எழுத்துக்கள் உள்ளன?
12

13. சைவசமயத்தினது முழுமுதற் கடவுள் யார்?
சிவபெருமான்

14. பாஞ்சாலிசபதம் எழுதியவர் யார்?
சுப்பிரமணிய பாரதியார்

15. திருக்குறள் எத்தினை அதிகாரங்களைக் கொண்டுள்ளது?
133 அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

16. திராவிட மொழிக் குடும்பத்தின் தாய் மொழி யாது?
தமிழ்

17. கனடிய நாடாளுமன்றத்தில் தமிழ் மரபுத்திங்கள் எப்பொழுது சட்டமாக்கப்பட்டது?
2016

18. தமிழ் நூல்களில் மிகவும் அதிகமாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் நூல் யாது?
திருக்குறள்

19. பற்களின் தொகுதியை எவ்வாறு அழைப்பீர்?
பல்வரிசை

20. மூன்றுமுறை தலையில் குட்டி வணங்கப்பெறுபவர் யாார்?
பிள்ளையார்

21. மருத்துவரின் உதவியின்றி ஒருவர் தமக்குச் செய்யும் மருந்து யாது?
கைமருந்து

22. “நாலும் இண்டும் சொல்லுக்கு உறுதி“ இங்கே நான்கும் இரண்டும் எதனைக் குறித்து நிற்கிறது?
நாலடியார், திருக்குறள்.

23. முருகப்பெருமானின் வாகனம் யாது?
மயில்

24. முழு இலங்கையையும் சோழர் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்த மன்னன் யார்?
இராசேந்திர சோழன்.

25. ”நோபல்” பரிசு பெற்ற முதல் தமிழர் யார்?
சி.வி. இராமன்

26. தமிழ் மொழியில் கிடைத்துள்ள மிகப் பழைய இலக்கண நூல் யாது?
தொல்காப்பியம்

27. முத்தமிழ்க் காப்பியம் என அழைக்கப்படும் காப்பியம் எது?
சிலப்பதிகாரம்.

28. தமிழில் உள்ள முதல் எழுத்துக்கள் எவை?
30 (12 உயிர் எழுத்துக்கள், 18 மெய்யெழுத்துக்கள்)

29. தமிழர்களை ஆட்சி செய்த மூவரசுகள் எவை?
சேர அரசு, பாண்டிய அரசு, சோழ அரசு.

30. “பொய்யாமொழி“ என அழைக்கப்படும் நூல் யாது?
திருக்குறள்

31. ஔவையாருக்கு நெல்லிக்கனி கொடுத்த மன்னன் யார்?
அதியமான்.

32. பாடல் பெற்ற ஈழத்துத் திருத்தலங்கள் இரண்டு கூறுக.
திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம்.

33. தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலை இயற்றியவர் யார்?
மனோன்மணியம் சுந்தரனார்

34. யாழ்ப்பாணத்தில் (நல்லூரில்) தோன்றிய சைவப்பெரியார் யார்?
ஆறுமுகநாவலர்

35. தமிழர் கதிரவனுக்கு நன்றி செலுத்த எடுக்கும் விழா எது?
பொங்கல் விழா.

36. தமிழரின் தொன்மையான கலைகளில் ஒன்று தருக?
கூத்து.

37. தமிழர் அதிகம் பயன்படுத்தும் தானிய வகைகள் 4 கூறுக.
அரிசி, உழுந்து, பயறு, எள்ளு.

38. .“தமிழுக்கு அமுதென்று பெயர்“ என்ற பாடலைப் பாடியவர் யார்?
பாரதிதாசன்.

39. தமிழ்மொழியிலுள்ள மொத்த எழுத்துக்கள் யாவை?
247

40. மரபாக வாழ்ந்த இடத்தை விட்டு மற்றுமொரு இடத்திற்கு இடம் பெயர்வதை எவ்வாறு அழைப்பீர்?
புலப்பெயர்வு.